<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 392/2015**

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>

<u>வாக்குமூலம் – வா.சா–2</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்திக் | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | தாராபுரம் | நாள் | : | 08.09.2023 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2023 ஆண்டு செப்டம்பர் 08ம் நாள் சாட்சியம்.

---

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதியின் கிரைய ஆவணத்தில் என்ன சொல்லப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும். பிரதிவாதியின் பூமிக்கு தடம் கண்டு எழுதப்பட்டுள்ளது, ஆனால் நிலையில் இல்லை. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட விவரம் வாதி சொல்லி தெரியும், நேரடியாக தெரியாது. எனது பூமியின் காலை எண்.266/5 வாதியின் பூமிக்கு கிழபுறமாக உள்ளது. எனது பூமியில் பிரதிவாதிக்கு எந்த தடமும் இல்லை. வாதி பூமியின் கிழக்கோட்டில் மண்திட்டு இல்லை, வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. இன்றைய தேதி வரையிலும் பைபாஸ் ரோட்டில் இருந்து வாதி பூமியின் கிழக்கோட்டில் வடக்கு நோக்கி பிரதிவாதி பூமி வரை 20 அடி தடம் செல்லுகிறது, அதைத்தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதி எனக்கு மாமா முறை ஆகிறார். வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- Ms.Mathivathani Vanangamudi,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.